3. அறிக்கை அளித்தல்.

சுந்தரம் கிளேடன் நிறுவனத் தொழில் தகராறில் ஏற்பட்டுள்ள உடன்பாடு குறித்து தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அளித்த அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் விதி 82-ன் கீழ், மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரவர்கள் அவைக்கு ஒரு அறிக்கை அளிப்பார்கள்.

* மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவரவர்களே, சுந்தரம் கிளேடன் நிறுவனத் தொழில் தகராறில் உடனடித் தீர்வு காண வேண்டி தொழிலாளர் பிரதிநிதிகளும், நிர்வாகத்தினரும் மாண்புமிகு முதல்வரைச் சந்தித்து நடத்திய பேச்சு வார்த்தைகளின் பயனாக 7—8—1977 அன்று தொழிலாளர் களின் பிரதிநிதிகள்—நிர்வாகத்தினர் ஆகிய இருதரப்பாரும் ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில் கீழ்க்கண்ட உடன்பாடுகள் ஏற்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1. 1976 ஆம் ஆண்டு கொடுத்து வந்த அளவில் தொழிலாளர்கள் தொடர்ந்து உற்பத்தியைத் தந்து வருவார்கள்.

2. மத்திய அல்லது மாநில அரசினால் நியமிக்கப்பட்ட உற்பத்தித் திறன் பொறியாளர்களும், நிர்வாகப் பிரதிநிதியாக பொறியாளர் ஒருவரும், தொழிற்சங்கப் பிரதிநிதியாகப் பொறியாளர் ஒருவரும் சேர்ந்து 1975-ஆம் ஆண்டுக்கு ஒட்டு மொத்தமாகக் கிடைத்த உற்பத்தித் திறனுக்கு மேல் உயர்வு ஏற்பட்டுள்ளதா என்பதுபற்றி ஆய்வு நடத்துவார்கள். ஆய்வாளர்களின் அறிக்கை மூன்று மாத காலத்திற்குள் வெளியிடப்படும். அந்த அறிக்கையின் அடிப்படையில் உற்பத்தித் திறனில் உயர்வு ஏற்பட்டுள்ளது என்று கண்டால் தொழிலாளருக்கு அதற்குத் தக்க முறையில் ஈடுசெய்யப்படும். ஆய்வாளரின் முடிவுப்படி ஈட்டுத் தொகை கொடுக்க வேண்டியிருந்தால், அந்தகைய முடிவு தொழிற்சாலை மீண்டும் திறக்கப்பட்ட நாளிலிருந்து அமுல் செய்யப்படும்.

3. தற்காலிகமாக, வேலையிலிருந்து, நீக்கப்பட்ட 15 தொழிலாளர்களும் மீண்டும் வேலையில் அமர்த்தப்படுவார்கள். அவர்கள் பெயரில் உள்ள குற்றச்சாட்டுகள் பற்றி, துரிதமாக விசாரணை நடத்தப்படும். ஆனால், இந்தத் தொழிலாளர்களைப்பற்றி விசாரணை

முடிந்த பிறகு முதல்வருடன் கலந்து, அவரது முடிவை ஏற்பதாக நிர்வாகத்தினர் ஒப்புக்கொண்டுள்ளார்கள். இதைத்தவிர, குற்றஞ் சாட்டப்பட்ட ஏனைய தொழிலாளர் மீது மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது. வேலையில்லாத நாட்களுக்கு ஊதியம் கிடையாது.

4. சகஜ நிலை மீண்டும் உருவான பின்னர், முதல்வர் குறிப்பிடும் தேதியில் தொழிற்சங்கத்தின் நிர்வாகத்தினர் ஜனநாயக முறையில் நடத்தப்படும் தேர்தல் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

5. தொழிற்சங்கத்தின் சார்பாக நிர்வாகத்துடன் தொடர்பு கொள்வதற்குத் தொழிற்சங்கத்தின் செயற்குழு தொழிலாளர் சக்திவேலு என்பவரைப் பிரதிநிதியாக நியமிக்கும். இந்த ஏற்பாடு, தொழிற்சங்கத்தின் நிர்வாகத்தினர் தேர்ந்தெடுக்கப்படும் வரையில் நடைமுறையில் இருக்கும்.

6. தொழிற்சங்கத்தின் நிர்வாகத்தினர் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் இப்போது எழுந்துள்ள மற்ற பிரச்னைகள் பேச்சு வார்த்தைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

7. இந்த உடன்பாட்டின் அடிப்படையில் நிர்வாகத்தினரும் தொழிலாளரும், ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு தந்து ஒழுங்குக்கும், உற்பத்திக்கும் பாதிப்பு இல்லாமல் நடந்து கொள்ளவும் ஒத்துக்கொள்கின்றனர். 10—8—1977 முதல் மீண்டும் வேலை ஆரம்பிப்பதென ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது என்ற நல்ல செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-40)

திரு. க. சுப்பு: பாயின்ட் ஆப் ஆர்டர். பேரவைத் தலைவர் அவர்களே, விதி 82-ன் கீழ் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிக்கை வைத்திருக்கிறார்கள். வைக்க வேண்டியதுதான். ஏற்கனவே இந்தப் பிரச்சினையில் செய்யப்பட்ட முடிவுகள் அத்தனையும் பத்திரிகைகளில் வந்து விட்டன. அவைகளை திரும்ப இங்கே கொடுத்து இந்த அவையின் நேரத்தை வீணாக்குவது, விதிமுறைகளுக்கு உட்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: நேற்றைய தினம் ஞாயிற்றுக் கிழமை என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அந்தத் தொழிலாளர்கள் வெளியூர் சென்றிருக்கிற காரணத்தால் அவர்களை உடனே வேலைக்கு வரவழைத்து, வேலையில் ஈடுபடுத்த அந்த நிர்வாகம் எண்ணி, எல்லாப் பத்திரிகைகளுக்கும் விளம்பரம் கொடுத்திருக்கிறார்கள். அது 'பாக்ஸ்' நியூசாக வந்திருக்கிறது. அந்த அடிப்படையிலே செய்து, பத்திரிகையில் வந்திருக்கிறது. இது நம்மால் தடுக்க முடியாத ஒன்று ஆகும்.

திரு. க. சுப்பு: வந்த பிறகு இவர் என்ன சொல்வது என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பத்திரிகையில் வருவது ஒன்றிரண்டு குறைந்து இருக்கும். முழுமையான அறிக்கைக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

4. கவன ஈர்ப்பு.

(அ). திருவண்ணாமலை கோட்டம், கலசப்பாக்கம் தொகுதியில் பருவமழை இல்லாத காரணத்தினால் குடிதண்ணீர் பஞ்சம் கடுமையாக உள்ளது குறித்து.

* திரு. பி. எஸ். திருவேங்கடம்: தலைவர் அவர்களே, கீழ்க் கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"திருவண்ணாமலை கோட்டம், கலசப்பாக்கம் தொகுதியில் தொடர்ந்து நான்கு ஆண்டுக் காலமாக பருவமழை சரிவர இல்லாத காரணத்தால் தற்சமயம் குடி தண்ணீர் பஞ்சம் கடுமையாக உள்ளது. மக்கள் கவலையாக இருக்கிறார்கள். அதற்கான உரிய நடவடிக்கையினை அரசு எடுக்க வேண்டும்."

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: கலசபாக்கம் சட்டமன்ற தொகுதியானது கலசபாக்கம் துரிஞ்சபுரம் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள எல்லா கிராமங்களும் சேத்துப்பட்டு ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 11 கிராமங்களும் சேர்ந்தது ஆகும்.